# இயல் 7.5 - வடிவியல்


பயிற்சி எண் :: 7.5.1.2.B

வடிவியல் (Geometry) - குத்தெதிர்க் கோணங்கள் - வரையறை

## வடிவியல் (Geometry) - குத்தெதிர்க் கோணங்கள் - வரையறை

இரு நேர்கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக்கொள்ளும்பொழுது படத்தில் காண்பது போல், வெட்டும் புள்ளியில் 4 கோணங்கள் உருவாகின்றன. அவை ஒன்றிற்கொன்று எதிர் எதிராக இரு ஜோடிகளாக அமைகின்றன. இவ்வாறு எதிர் எதிராக அமையும் கோணங்களை நாம் **குத்தெதிர்க் கோணங்கள்** என அழைக்கிறோம். $\angle p$-யும் $\angle q$-யும் குத்தெதிர்க் கோணங்கள். அதே போல் $\angle r$ - ம் $\angle s$ - ம் குத்தெதிர்க் கோணங்கள். குத்தெதிர்க் கோணங்கள் ஒன்றிற்கொன்று சமமானவை ஆகும்.

### குத்தெதிர் கோணங்கள் சமமானவை என்பதை நிரூபித்தல்




$\angle r$ - ம் $\angle p$ - யும் $\overleftrightarrow{DB}$ - யின் மீது அமைந்த நேரிய கோண இணைகள். எனவே; $\Rightarrow \angle r + \angle p = 180^\circ$

அதேபோல், $\angle r$ - ம் $\angle q$ - யும் $\overleftrightarrow{EC}$ - யின் மீது அமைந்த நேரிய கோண இணைகள். எனவே; $\Rightarrow \angle r + \angle q = 180^\circ$

$$\therefore \angle r + \angle p = \angle r + \angle q$$

$$\angle p = \angle r + \angle q - \angle r$$

$$\therefore \angle p = \angle q$$

இதேபோல் $\angle r$ மற்றும் $\angle s$ இரண்டும் சமம் என நம்மால் நிரூபிக்க இயலும்.

இதிலிருந்து, குத்தெதிர்க் கோணங்கள் ஒன்றிற்கொன்று சமமானவை என நிரூபணமாகிறது.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/ig-zQ3RsAPE


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Monday 16th January, 2023 :: 12:03 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**